# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.114/2021 | Village | : | |
| Prosecution witness | : | PW-29 | Taluk | : | |
| Name | : | திரு. ஜெகதீசன் | Occupation | : | |
| Father Name | : | திரு. வெங்கடாசலபதி | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 06.10.2025**

A1 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது பெரம்புலூர் மாவட்ட தனிபிரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 28.5.2020 ஆம் தேதி வட்ட காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது எங்கள் காவல் எல்லைக்குட்பட்ட நடுகாவேரி காவல்நிலைய கு.எண் 709/2020 என்ற முதல் தகவல் அறிக்கையை என்னுடைய பார்வைக்கு வைக்கபட்டதை நான் அன்றே விசாரணைக்கு எடுத்துகொண்டு 18 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகானந்தம், சிவானந்தம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் வரைபடம் தயார் செய்தேன். பின்பு சாட்சிகள் முன்பாக அவ்விடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த மற்றும் தோயாத மண் சிறிதளவு மகசரில் கைபற்றினேன். மேலும், வழக்கின் புகார்தாரர் வெண்ணிலா என்பவர் வீட்டிற்கு சென்று அதே சாட்சிகள் முன்பாக வழக்கின்

1) தடயம் சுமார் 36 செமீ நீளம், 37 செமீ அகலமுள்ள கருப்பு கலர் டிவி ஒன்று அதில் தமிழ்நாடு அரசு வண்ணதொலைகாட்சி என்று எழுதபட்டிருந்தது.

2) 91 செமீ நீளம், 31 செமீ அகலமுள்ள முகம்பார்க்கும் கண்ணாடி பிரேம் இதே சாட்சிகள் முன்பாக கைபற்றினேன். சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேற்படி தடய பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 28.5.2020 ஆம் தேதி சாட்சிகள் வெண்ணிலா, மோனிஷா, செய்தலி பாத்திமா, முருகவேல், வசந்தா, ஜெயசீலன், தனலெட்சுமி ஆகியோரை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே சாட்சி வெண்ணிலாவை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.5.2020 அன்று சாட்சிகள் அருணா, ராஜ்குமார், புகழேந்தி, சசிகலா, கண்ணகி, வித்யா, கரோலின், சகாயராஜ், பாலா என்கிற பாலசுப்ரமணியன், இளையராஜா ஆகியோரை தனிதனியே

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 29.5.2020 திருவையாறு அரசு மருத்துவமனை சவகிடங்கு முன்பு வழக்கில் இறந்துபோன குணா என்கிற குணசீலன் என்பவரின் பிரேத விசாரணை மேற்கொள்ள சாட்சிகள் கோவிந்தராஜ், சதீஷ்குமார், தேவி, கலியமூர்த்தி, பழனிசாமி ஆகியோருக்கு சம்மன் கொடுத்து அவர்கள் முன்பாக அவர்கள் அடையாளம் காட்ட குணா என்கிற குணசீலன் இறந்தவரை உறுதி செய்து மேற்படி சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்து அந்நாரை சடலக்கூறாய்வு மேற்கொள்ள காவலர் திரு ரமேஷ்குமார் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். அவர் சடலக்கூறாய்வு முடித்து பிரேத்தை உறவினர் வசம் இறுதி சடங்கிற்கு ஒப்படைத்து குணா என்கிற குணசீலன் உடலில் இருந்த காவி கலர் நான்கு மூழ வேட்டி ஒன்று, Poomex என்று எழுதபட்ட மெருன் கலர் கால்சட்டை மாதிரியில் உள்ள ஆண்கள் உள்ளாடை ஒன்று, கருப்பு ஊதா கட்டம்போட்ட முழுக்கை சட்டை ஒன்று, அதை தனியறிக்கை மூலம் ஒப்படைத்தார். அதை நான் படிவம் 95இல் கைபற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடி செல்கையில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் வழக்கின் 3வது எதிரி அசோக்குமார் என்கிற அரசகுமார் மனகரம்பை இந்தியன் வங்கி அருகில் 29.5.2020 தேதி இருப்பதை உறுதி செய்து அங்கு சென்று மதியம் 12.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து அங்கிருந்த சாட்சிகள் பிரகாஷ்ராஜ், சுகுந்தன் ஆகியோர் முன்னிலையில் அவரை விசாரிக்க அவர் எவ்வித அச்சுறுத்தலும் , ஆசை வார்த்தையும் இல்லாமல் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை நான் பதிவு செய்தேன். அதில் அவர் அங்கிருந்த அவரை அவரது வீட்டிற்கு அழைத்து போனால் வீட்டின் பின்புறம் உள்ள சுமார் 80 செமீ நீளமுள்ள பழைய கட்டில் இரும்பு பைப் இருப்பதாகவும், அதை எடுத்து தருவதாகவும் சொன்னார். அதன் அடிப்படையில் அவரை மேற்படி சாட்சிகளுடன் அவ்விடத்திற்கு அழைத்து செல்ல அவர் மேற்படி இரும்பு பைப்பை சாட்சிகள் முன்பாக என்னிடம் எடுத்து ஆஜர் செய்ய அதை மகசரில் கைபற்றினேன். எதிரியை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்புவித்து அன்றே தக்க ஆவணங்களுடன் நீதிமன்ற காவல் வேண்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம் திருவையாறுக்கு அனுப்பிவைத்தேன். கைபற்றபட்ட சான்று பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். 31.5.2020 ஆம் தேதி மற்ற இரண்டு எதிரிகளை தேடி செல்கையில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் 13.30 மணியளவில் மனகரம்பை ராவுண்டானா கோவை பேக்கரி அருகில் நின்று கொண்டிருந்த 1வது எதிரி மணிகண்டன், 2வது எதிரி கார்த்திக்ராஜா ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்து அங்கிருந்த சாட்சிகள் சிலம்பரசன், ராகவன் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க அவர்கள் எந்தவித அச்சுறுத்தலும், ஆசை வார்தையும் இல்லாமல் அவர்கள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்பாக நான் பதிவு செய்தேன். அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி மணிகண்டன், குணா என்கிற குணசீலனை கொலை செய்ய பயன்படுத்திய இரும்பாலான 63 செமீ

நீளமுள்ள 8 செமீ சுற்றளவுள்ள கை கடப்பாறை ஒன்றை பள்ளியக்கிரகாரம் ராஜ்நகர், ஜம்பு காவேரி வாய்க்கால் அருகில் உள்ள முட்புதரில் வைத்திருப்பதாகவும் அழைத்து போனால் எடுத்து தருவதாகவும் சொன்னார். அதேபோல் 2வது எதிரி கார்த்திக்ராஜா என்பவர் தமது ஒப்புதல் வாக்குமூலத்தில் குணசீலனை கொலை செய்ய பயன்படுத்திய 54 செமீ நீளம் கொண்ட இரும்பு அரிவாளை ஒன்றை பள்ளியக்கிரகாரம் ராஜ்நகர், ஜம்பு காவேரி வாய்க்கால் அருகில் உள்ள முட்புதரில் வைத்திருப்பதாகவும் அழைத்து போனால் எடுத்து தருவதாகவும் சொன்னார். மேற்படி சாட்சிகளுடன் பள்ளியக்கிரகாரம் ராஜ்நகர், ஜம்பு காவேரி வாய்க்கால் அருகே அழைத்து போக அங்கு உள்ள முட்புதரில் இருந்து சுமார் 54 செமீ நீளமுள்ள அரிவாள் ஒன்று, இரும்பு கை கடப்பாறை ஒன்று எடுத்து கொடுத்தார்கள் அவைகளை சாட்சிகள் முன்பாக மகசரில் கைபற்றினேன். பின்பு எதிரி தடயத்துடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரிகளை பாரா வசம் ஒப்படைத்து தக்க வேண்டுகோள் கடிதத்துடன் நீதிமன்ற காவல் வேண்டி திருவையாறு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு ஆவணங்களையும், சான்று பொருளைவும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.வழக்கின் தடய பொருட்களான இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண், கைபற்றபட்ட காவி கலர் நான்கு மூழ வேட்டி ஒன்று, Poomex என்று எழுதபட்ட மெருன் கலர் கால்சட்டை மாதிரியில் உள்ள ஆண்கள் உள்ளாடை ஒன்று, கருப்பு ஊதா கட்டம்போட்ட முழுக்கை சட்டை ஒன்று மற்றும் எதிரிளிடமிருந்து விசாரணையில் கைபற்றபட்ட பழைய கட்டில் இரும்பு பைப், அரிவாள், கை கடப்பாறை ஆகியவைகளை தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவைகளை அனுப்பி வைத்தேன். வழக்கில் உடைந்துபோன கண்ணாடி மதிப்பீடு செய்த கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மதிப்பீடு சான்று பெற்றேன். வழக்கில் சம்மந்தபட்ட உடைந்துபோன வண்ணதொலைகாட்சி மதிப்பீடு செய்த சதாமுசைன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மதிப்பீடு சான்று பெற்றேன். தடய பொருட்களை ஆய்வு செய்து சான்று வழங்கிய வட்டார தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் திருமதி காயத்ரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திரு சிவக்குமார், வட்டார தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் இறந்துபோன குணா என்கிற குணசீலன் சடலக்கூறாய்வு மேற்கொண்ட மருத்துவர் ராகவேந்திரா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று முன்னிலைபடுத்திய காவலர் சிவானந்தம், பிரேத பரிசோதனைக்கு உடனிருந்து உதவி செய்த காவலர் ரரேஷ்குமார் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல்த கவல் அறிக்கை பதிவு செய்து என் விசாணைக்கு வைத்த உதவி ஆய்வாளர் திரு பாலகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.வழக்கின் சட்டபிரிவை 294 பி, 448, 342, 302 இதச மற்றும் உ..இ. 3(1) PPDL Act

லிருந்து 294 பி, 427, 448, 342, 302, 506(ii) உ.இ 120பி இதசவாக மாறுதல் செய்து மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் பின்பு அனைத்து புலன்விசாணையை முடித்து மேற்படி எதிரிகளுக்கு எதிராக 294 பி, 427, 448, 342, 302, 506(ii) உ.இ 120பி இதச இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.15**, நான் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் **அ.த.சா.ஆ.16, 17** ஆகும். 28.5.2020 அன்று 19 மணிக்கு தயார் செய்யபட்ட கைபற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.18** ஆகும். அதன் அடிப்படையில் கைபற்றிய இரத்தம் படிந்த மண், படியாத மண் முறையே **சா.பொ.6, 7** ஆகும். 31.5.2020 அன்று 16 மணிக்கு தயார் செய்யபட்ட கைபற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.19** ஆகும்.அதன் அடிப்படையில் கைபற்றபட்ட இரும்பு அரிவாள் ஏற்கனவே சா.பொ 3 ஆககுறியாகியுள்ளது. 31.5.2020 அன்று 15.30 மணிக்கு செய்யபட்ட கைபற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.20** ஆகும். அதன் அடிப்படையில் கைபற்றபட்ட இரும்பு கை கடப்பாறை ஏற்கனவே சா.பொ 1 ஆககுறியாகியுள்ளது. 28.5.2020 அன்று 19.15 மணிக்கு தயார் செய்யபட்ட கைபற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.21** ஆகும். அதன் அடிப்படையில் கைபற்றபட்ட வண்ணதொலைகாட்சி ஏற்கனவே சா.பொ 4 ஆககுறியாகியுள்ளது. அதேபோல் கைபற்றபட்ட முகம் பார்க்கும் கண்ணாடி பிரேம் ஏற்கனவே சா.பொ 5 ஆககுறியாகியுள்ளது. காவி கலர் நான்கு மூழ வேட்டி ஒன்று, Poomex என்று எழுதபட்ட மெருன் கலர் கால்சட்டை மாதிரியில் உள்ள ஆண்கள் உள்ளாடை ஒன்று, கருப்பு ஊதா கட்டம்போட்ட முழுக்கை சட்டை ஒன்று ஆகியவை முறையே **சா.பொ. 8, 9, 10** ஆகும். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.22** ஆகும். அசோக்குமார் என்கிற அரசகுமார் என்னிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கபட்ட பகுதி **அ.த.சா.ஆ.23** ஆகும். அதேபோல் எதிரிகள் மணிகண்டன், கார்த்திக்ராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கபட்ட பகுதி **அ.த.சா.ஆ.24, 25** ஆகும். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.26** ஆகும். வண்ணதொலைகாட்சி மதிப்பீட்டு சான்று **அ.த.சா.ஆ.27** ஆகும். கண்ணாடி மதிப்பீட்டு சான்று **அ.த.சா.ஆ.28** ஆகும். தடய பொருட்களை கைபற்றி நீதிமன்றத்திற்கு நான் அனுப்பிய படிவம் 91 முறையே **அ.த.சா.ஆ.29 முதல் 34** ஆகும். சாட்சிளை என்னுடைய விசாரணையில் சம்பவம் பற்றி சொன்னார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.